සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved


වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

10. 12012 எனும் எண் உள்ளடங்காத எண் அடி பின்வருவனவற்றுள் எது?
1. மூன்று 2. எட்டு 3. நான்கு 4. இரண்டு

11. $1010_{\text{இரண்டு}}$ மற்றும் $1011_{\text{இரண்டு}}$ ஆகிய எண்களின் கூட்டுத்தொகையானது,
1. 22 2. 16_{16} 3. 25_{8} 4. 10011_{2}

12. பின்வருவனற்றுள் BCD எண் எது?
1. 1010 0001 2. 1001 0000 3. 1000 1010 4. 1001 1011

13. 1 ,0 ஆகிய எண்களை உள்ளீடுகளாக வழங்கும் போது கிடைக்கப்பெறும் வெளியீடுகள் முறையே எது?
1. 1, 0
2. 0, 1
3. 0, 0
4. 1, 1



14. தரப்பட்டுள்ள தர்க்கப்படலைக்கு அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள உள்ளீடுகளை வழங்கும் போது கிடைக்கப் பெறும் வெளியீகள் முறையே:
1. 0110
2. 0111
3. 1110
4. 0001



உள்ளீடு	
A	B
0	0
0	1
1	0
1	1

15. கணிணியை தொடக்கும் போதான ஆரம்பித்தல் செய்நிரல் அமையப்பெற்றிருப்பது.
1. RAM 2. நினைவகப் பதிவகம்
3. பதுங்கு நினைவகம் 4. வாசிப்பு மட்டும் நினைவகம்

16. கீழே தரப்பட்டுள்ள கோப்பு நீட்சிகளுள் செய்நிரல் கோப்பு நீட்சி எது
1. .docx 2. .jpeg 3. .wmf 4. .exe

17. தனிப்பயனர் - பல்பணிசெயல் முறைக்கு உதாரணமாகஅமைவது?
1. MS DOS 2. Windows 8 3. Unix 4. Ubuntu Server

18. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருதுக.
A. எழுத்துருக்களை அல்லது பவுருக்களைப் பிரதி செய்யப்பயன்படும்.
B. எழுத்துருக்களை அல்லது பவுருக்களைப் வெட்டுவதற்குப் பயன்படும்.
C. பிரதி பண்ணிய எழுத்துருக்களை அல்லது பவுருக்களைப் ஒட்டுவதற்குப் பயன்படும்.
மேலுள்ள கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை எது/ எவை?
1. A யும் B யும் மட்டும் 2. B யும் C யும் மட்டும் 3. A யும் C யும் மட்டும் 4. A, B, C யாவும்.

19. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் தெரிதல் வசதி தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. முழு ஆவணத்தையும் தெரிவு செய்வதற்கான குறுக்குச் சாவி Enter ஆகும்.
B. ஆவணத்திலுள்ள ஒரு சொல்லைத் தெரிவு செய்ய அச்சொல்லின் மேல் சுட்டியை கிளிக் செய்ய வேண்டும்.
C. ஆவணத்திலுள்ள வாக்கியத்தை தெரிவு செய்வதற்கு வாக்கியத்தின் முதல் சொல்லின் முன்னாலிருந்து வாக்கியத்தின் கடைசி சொல்வரை சுட்டியை அழுத்தி இழுத்துச் செல்ல வேண்டும்.
மேலுள்ள கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை எது/ எவை?
1. B மட்டும் 2. A மட்டும் 3. A, C மட்டும் 4. B, C மட்டும்

20. பக்கத்தின் திசையை மாற்றுவதற்காக சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படுத்தப்படும் வசதி பின்வருவனவற்றுள் எது?
1. 2. 3. 4.






21. படவில்லைகளின் பின்னனிக்கு வழங்கப்படும் வசதிகள்
A. படவில்லைகளின் பின்னனிக்கு வித்தியாசமான நிறங்களை வழங்குதல்
B. பல்வேறுவகையான உருவாக்குதல்.
C. படங்களை அல்லது வரைபியல்களை உள்ளிடுதல்.
மேலுள்ள கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை எது/ எவை?
1. A மட்டும் 2. A யும் B யும் மட்டும் 3. C மட்டும் 4. A, B, C யாவும்

22. முகில் கணிப்பு சேவையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமான இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருள் பின்வருவனவற்றுள் எது?
1. Open Office.org Impress
2. Microsoft One Drive word
3. MS Office- 365 Power Point
4. MS Office – 365 Excel

• 23, 24 ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தரவுத்தள அட்டவணைகளைப் பயன்படுத்தி விடையளிக்க.

மாணவர் அட்டவணை		
Index No.	Name	Grade
45507	Amal	10A
45508	Kasun	10A
45509	Mala	10C
45510	Vimala	10D

புத்தக அட்டவணை	
Book Name	Book No.
Madol D oowa	1007
Hathpana	1008
Heensaraya	1009
Sudu Neluma	1005

மாணவர் புத்தக அட்டவணை			
Index No.	Book No.	Date of Borrow	Date of Submitted
45507	1007	2017/05/11	2017/05/29
45508	1008	2017/05/13	2017/05/31
45509	1009	2017/05/31	2017/06/13
45510	1005	2017/06/03	2017/06/20

23. மாணவர் புத்தக அட்டவணையின் புலங்களுக்குப் பொருத்தமான தரவு வகைகள் ஒழுங்கு முறையே
1. எண், எண், திகதி/ நேரம், திகதி/ நேரம்
2. பாடம், எண், திகதி/நேரம், திகதி/நேரம்,
3. எண், பாடம், பாடம், பாடம்
4. பாடம், பாடம், திகதி/நேரம், திகதி/நேரம்

24. மேலே தரப்பட்டுள்ள மாணவர் புத்தக அட்டவணையில் முதன்மைச்சாவிக்குப் பொருத்தமான முதன்மைச் சாவி / சாவிகள்
1. Index_Number
2. Book_Number
3. Index_Number and Book_Number
4. Date_of_Borrow

25. தரவுத்தளங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுவது
1. அட்டவணை Tables
2. படிவம் Forms
3. வினவல் Queries
4. அறிக்கை Reports

26. முதன்மைச் சாவி தொடர்பாக சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1. அட்டவணையிலுள்ள இரு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட புலங்களை தனித்துவமான இனங்காணப் பயன்படுத்தப்படும்.
2. நபரின் பெயர் முதன்மைச் சாவிக்கு உதாரணமாகும்
3. முதன்மைச்சாவி புலத்தில் பதிவுகளின் மீள்பதிவுகள் காணப்படாது.
4. முதன்மைச் சாவிப்புலம் வெறுமையாகக் காணப்படலாம்.

27. தரவுத்தளமொன்றின் இயல்பொன்றாக கருதமுடியாதது பின்வருவனவற்றுள் எது?
1. முழுமையான தரவு மீள்பதிவாக்கம்
2. தரவுகளைத் தேடுவது
3. தரவு மறுபதிவாக்கம் அற்றிருத்தல்
4. அதிகூடிய நம்பகத்தன்மை

28. தரவுத்தள முகாமைத்துவ மென்பொருளுக்கு உதாரனமாகக் கொள்ள முடியாத மென்பொருள் பின்வருவனவற்றுள் எது?
1. Access
2. Base
3. Oracle
4. Lotus 123

29. பாடசாலை ஒன்றில் இணைப்பாட விதானச்செயற்பாடுகளில் குறிப்பிட்ட விளையாட்டுக்கு மாணவர் குழு காணப்படுகின்றது. வலைப்பந்து, கரப்பந்து மற்றும் கிரிகட் ஆகிய போட்டிளில் ஒன்றிலேனும் குறிப்பிட்ட மாணவன் பங்குவற்றல் வேண்டும். மேலுள்ள தரவுத் தொடர்பாடலை விளக்குவது,
1. ஓன்றுக்கு ஒன்று தொடர்புடமை One to one relationship
2. ஓன்றுக்கு பல தொடர்புடமை One to many relationship
3. புலவிற்குப் பல தொடர்புடமை Many to many relationship
4. தொடர்புடமை இல்லை

30. A1 மற்றும் B1 கலங்கள் முறையே 12, 34 ஆகிய எண்களை முறையே கொண்டிருப்பின், "**=A1&B2"** எனும் சூத்திரம் உள்ளிடப்பட்டால் காடசிப்படுத்தப்படுவது எது?

1. 46
2. 1234
3. 12 34
4. Error என காட்சியளிக்கும்

	A	B
1	24	0
2	45	
3	abc	25
4		

31. மேலுள்ள விரிதாளில் = AVERAGE (A1: A3, B1) எனும் சமன்பாடு உள்ளிடப்பட்டால் அதில் காட்சிப்படுத்தப்படுவது,

1. 5 2. 4 3. 3 4. Display an error

32. வினா இலக்கம் 31 இல் விரிதாளில் = AVERAGE (A1: A3, B1) எனும் சமன்பாடு உள்ளிடப்பட்டால். அதில் காட்சிப்படுத்தப்படுவது,

1. 23 2. 34.5 3. 17.25 4. 69

33. விரிதாள் தொடர்பாக பிழையான கூற்று பின்வருவற்றுள் எது?

1. சூத்திரங்கள் கட்டாயமாக "=" இனால் ஆரம்பிக்கப்படும்.
2. சார்பு "sum ()" இனுள் கலமுகவரிகள் "," காற்புளளியினால் வேறாக்கி வழங்கப்படும். ஆனால் அருகிலுள்ள கலங்கள் கலவீச்சுக்களாக வழங்கப்படும்.
3. சார்பினுள் கல முகவரிகள் கலவீச்சுக்களாக வழங்கப்படும் அதே வேளை கலமுகவரிகள் காற்புள்ளியினால் வேறாக்கப்படும்.
4. சார்புகளின் தொடக்கத்திலே "=" கட்டாயம் இடப்படும்.

34. 19 MOD 20 இனால் கிடைக்கப்பெறும் விடை பின்வருவனவற்றுள் எது?

1. 19 2. 20 3. 1 4. 0

35. தரப்பட்டுள்ள செய்நிரல் பகுதியின் வருவிளைவு பின்வருவனவற்றுள் எது?

```
Write ('saman'): Write (75): Writeln ('Amal): Wtire (79)
```

1. Saman 75
   Amal 79
2. Saman 75 Amal
   79
3. Saman 75 Amal 79
4. Saman
   75
   Amal
   79

36. பஸ்கல் செய்நிரல் மொழியில் பொருத்தமற்ற அடையாளங்காணி எது?

1. Num 2. Num1 3. Num_1 4. Num#

37. தரப்பட்டுள்ள பஸ்கல் செய்நிரல் பகுதியின் வருவிளைவு பின்வருவனவற்றுள் எது?

1. 012345 2. 0123456 3. 12345 4. தொகுக்க முடியாது.

38. பஸ்கல் செய்நிரலில் 20 DIV 6 எனும் சமன்பாட்டின் வருவிளைவு பின்வருவனவற்றுள் எது?

1. 2 2. 3 3. 4 4. 3.3333333333E+000

39. கீழே தரப்படுள்ள பஸ்கல் செய்நிரல் கூற்றின் விடை எது?
Writeln(234.56);

1. 2.34560000000000E+002
2. 234.56
3. 234
4. 2.34560000000000E-002

40. Bool எனும் பூலியன் மாறிக்குப் பொருத்தமாக வகை குறிக்கப்படும் கூற்றுள்ள விடை எது?

1. Bool:=faLsE; 2. Bool:='True';
3. Bool=False; 4. True:=Bool;

```
Program abc; Var n:InTeGeR;
Begin
        n: =o;
        While n< = 5 do
        Begin Write (n);n:=n+1; end;
        Write (n);
End.
```

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

(10) தரப்பட்டுள்ள செய்நிரலுக்கான வருவிளைவைத் தருக.

```
Program exercise;
var
      a,b:integer;
begin
      a;=o;
      for b:=1 to 7 do
      begin
            a:=a+b
            write in (a);
      end;
      readln;
end
```


02. வித்தியாசமான இசை ஸ்வரங்களைப் ஒழுங்குபடுத்துவதன் மூலம் பாடல் உருவாக்கப்பட்டது. வித்தியாசமான இரேகைகளையும் நிறங்களையும் பயன்படுத்தி அழகான ஓவியம் வரையப்பட்டது.

(1) மேலுள்ள பந்தியில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தரவு தகவல்களுக்கு உதாரணங்கள் 2 வீதம் தருக.

(2) கீழே தரப்பட்டுள்ள துறைகளுடன் இணைக்க முடியுமான சாதனங்கள் ஒவ்வொன்று வீதம் தருக.
PS/2 துறை, HDMI துறை, USB துறை, தொடர் துறை, சமாந்தர துறை.

(3) தரவு கடத்தப்படும் திசையிற்கு ஏற்ப தரவுத்தொடர்பாடல் மூன்று வகைப்படும். அவற்றை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(4) கணினி வலையமைப்பின் ஒரு பகுதி அருகில் தரப்பட்டுள்ளது.



i. தரப்பட்டுள்ள படம் எவ்வகை வலையமைப்பு இடத்தியலாகும்.


ii. மேலுள்ள வகையின் 2 நன்மைகளையும், 2 தீமைகளையும் குறிப்பிடுக.

iii. மேலுள்ள வலையமைப்பில் கணினிகளை இணைப்பதற்கு குவியம் (hub) பயன்படுத்தப்பட்டுள்ளது. குடத்துக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய சாதனம் ஒன்றைத் தருக.

iv. மேலுள்ள வலையமைப்பு மிகவும் சிறிய இடத்தில் அமைந்துள்ளது. சிறிய இடத்தில் பரந்துள்ளமையினால் மேலுள்ள வலையமைப்பின் வகை எது?

v. மேலுள்ள வலையமைப்பை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வழிப்படுத்திய ஊடகங்கள் 2 தருக.

03. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



Geographic Distribution **A**

Distribution of majority ethnicity by DS division according 2012 census within Sri Lanka the majority of the Sinhalese reside in the South, Central, Sabaragamuwa and western part of the country. This coincides with the largest Sinhalese populations areas in Sri Lanka. Cities with a >90% population include.

- Hambanthota
- Galle
- Gampaha
- Kurunagala
- Monaragala
- Anuradhapura
- Polonnaruwa

C

Distribution of Sinhalese in Sri Lanka (2012)

Province	Sinhalese People	% Province	% Sinhalese People
Central	1,687,199	66.00%	11.11%
Eastern	359,136	23.15%	2.36%
Northern	32,331	3.05%	0.21%
North Central	1,143,607	90.90%	7.53%
North Western	2,030,370	85.70%	13.38%
Sabaragamuwa	1,657,969	86.40%	10.92%

E

Source: http://en.wikipedia.org/wiki/sinhalese peopole

(A) 1. A எனும் எழுத்துக்களை வடிவமைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய கருவியைத் தருக.

2. B எனும் பட்டியலை வடிவமைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய கருவியைத் தருக.

3. C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள கலங்களை இணைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய கருவியைத் தருக.

4. D எனும் படவுருவை உள்ளீடு செய்வதற்கான படிமுறையைத் தருக.

5. E எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள இணையப் பக்கத்துடன் இணைக்க எழுத்துக்களை வடிவமைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய கருவியைத் தருக.

6. மேலே vi இல் தரப்பட்டுள்ள வசதியை பெறுவதற்கான குறுஞ்சாவியைக் குறிப்பிடுக.

(B) சம்பிரதாய முன்வைத்தலைப் பயன்படுத்துவதிலும் இலத்திரனியல் நிகழ்த்துகை பயன்படுத்துவதன் 2 நன்மைகளைத்தருக.

04. வீட்டுபகரணங்ளை விற்பனை செய்யும் சஜா நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளங்களை கணிப்பதற்காக பயன்படுத்தப்படும் விரிதாளின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு பொருட்களுக்கும் அடிப்படைச் சம்பளத்துக்கு மேலதிகமாக ரூபாய் 100.00 வீதம் வழங்கப்படுகின்றது.

	A	B	C	D	E
1	கஜான் விற்பனை நிலையம்				
2	மேலதிக கொடுப்பனவு			ரூ. 100.00	
3	பெயர்	அடிப்படைச் சம்பளம்	விற்பனை	கொடுப்பனவு	மொத்த சம்பளம்
4	சசிந்த	ரூபா. 5,000.00	ரூபா. 25.00	ரூபா. 2,500.00	ரூபா. 7,500.00
5	இஸ்ரியா	ரூபா. 4,700.00	ரூபா. 36.00	ரூபா. 3,600.00	ரூபா. 8,300.00
6	டிமால்	ரூபா. 5,300.00	ரூபா. 42.00	ரூபா. 4,200.00	ரூபா. 9,500.00
7	மொஹமட்	ரூபா. 3,850.00	ரூபா. 38.00	ரூபா. 3,800.00	ரூபா. 7,650.00
8	இந்ராஜ்	ரூபா. 6,200.00	ரூபா. 32.00	ரூபா. 3,200.00	ரூபா. 9,400.00
9	சம்பளக் கொடுப்பனவின் மொத்த செலவு				ரூபா. 42,350.00

1. சஜித்தவின் மேலதிகப் பணத்தை D4 கலத்தில் காண்பதற்கான சூத்திரத்தைத் தருக.
(மேலதிகமாக வழங்கப்படும் தொகை = விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை * பொருளொன்றுக்கான மேலதி கொடுப்பனவு)
2. மேலதிக கொடுப்பனவு நிரலை முற்றாகப் பூரணப்படுத்த மேற்கொள்ளும் படிமுறையை ஒழுங்காகத் தருக.
3. சஜிதாவின் மொத்த சம்பளத்தை E4 கலத்தில் பெறுவதற்கான சமன்பாட்டைத் தருக.
(மொத்த சம்பளம் = அடிப்படைச் சம்பளம் + மேலதிக கொடுப்பனவு)
4. ஊழியர்களையும் அவர்கள் பெற்றுக் கொண்ட சம்பளங்களையும் காட்சிப்படுத்த பொருத்தமான வரைபைப் பெயரிடுக.

05. (A) கீழே தரப்பட்டுள்ள பஸ்கல் செய்நிரலுக்கான வருவிளைவைத் தருக.

```
Program Exercise5;
Var P,Q: Interger;
Begin
        P:=1;
        Q:=1;
        While P<40 Do
        Begin
                Writeln (P);
                Q:= Q+2;
                P:=P+Q;
        End;
        Readln;
    End.
```

(B) A, B மற்றும் C ஆகிய மூன்று எண்களை உள்ளீடு செய்யும் போது மிகவும் சிறிய எண் வருவிளைவாக கிடைப்பதற்கான போலிக்குறிமுறை கீழே தரப்பட்டுள்ளது. இப்போலிக் குறிமுறைக்கான பாய்ச்சற் கோட்டுப்படத்தை வரைக.

```
Begin
        Input (A, B, C)
        Min = A
        If B< Min then
          Min = B
        Endif
        If C< Min then
          Min = C
        Endif
        Print (Min)
End.
```

06. பாடசாலையொன்றின் தொடர்புநிலைத்தரவுத்தளம் ஒன்றின் சில அட்டவணைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

புத்தக அட்டவணை

Book ID	Name	Borrowed
B5001	Sirimath	Yes
B5002	Hathpana	No
B5003	Metigedara	Yes
B5004	Heesnsaraya	Yes

சேர்க்கப்படும் அட்டவணை


Book_ID	Std_ID	Borrowed Date
B5001	S3521	2017/05/03
B5003	S3523	2017/05/12
B5004	S3521	2017/05/16

மாணவர் அட்டவணை

Std_ID	Name	Grade
S3521	Seetha	10A
S3522	Amal	10B
S3523	Piyal	10A

1. மேலுள்ள அட்டவணைகளில் இருந்து இரு முதன்மைச்சாவிகளை உரிய அட்டவணையுடன் தருக.
2. பாடசாலை நூலகத்துக்கு 2017/06/06 தினத்தன்று B5005 எனும் எண்ணையுடைய "அம்பயாலுவா" புத்தகம் புதிதாக சேர்க்கப்பட்டது.
   i. இவற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை/ அட்டவணைகள் எது / எவை?
   ii. இவற்றைப்படுத்த வேண்டிய பதிவுகளை உரிய அட்டவணையுடன் தருக.
3. S3524 சேர்வெண்ணுடைய "Ranil" எனும் மாணவன் 2017/07/03 தினத்தன்று புதிய அங்கவத்தவராக சேர்ந்தான்.
   i. இவற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை/ அட்டவணைகள் எது / எவை?
   ii. இவற்றைப்படுத்த வேண்டிய பதிவுகளை உரிய அட்டவணையுடன் தருக.

07. (A) தர்க்கப்படலைக்கான தர்க்கச்சுற்று கீழே தரப்பட்டுள்ளது. அதை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1. தர்க்கச்சுற்றிலுள்ள இரு தர்க்கப் படலை வகைகளைத் தருக.
2. வருவிளைவு "F" இற்கான பூலியன் கோவையைத் தருக.
3. மேலுள்ள (பகுதி ii) பூலியன் கோவைக்கான உண்மை அட்டவணையை வரைக.
4. மேலுள்ள தர்க்கச்சுற்றை வகைகுறிக்கும் அடிப்படை தர்க்க வகையைத் தருக.

(B) பணிசெயல் முறைமையொன்றில் ஏழு பிட்டு குறிமுறையினால் "A" எழுத்தை 100 0001 எனும் இலக்கங்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன.

1. மேலுள்ள கூற்றை வகைகுறிக்கும் குறிமுறை வகை எது? (சுருக்கமாக தருக)
2. 100 0001 எனும் இரும எண்ணை பிரதிநிதித்துவப்படுத்தும் தசம எண்ணைத் தருக.
3. மேலே தரப்பட்டுள்ள குறிமுறையால் "C" எழுத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரும எண்ணைத் தருக.

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න